# எழுதி வளர்ந்த இயக்கம்

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

■ பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்** 25

## இந்த நூல் நம் அடையாளம்!

ஒரு வாழ்க்கை வரலாற்று நூல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கும் திகழும் நூல்தான், நம் அருமைத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதியிருக்கிற 'நெஞ்சுக்கு நீதி'.

அது ஒரு தன்வரலாற்று நூல்தான். ஆனால், அதனுள் இயக்கத்தின் வரலாறு பின்னிப் பிணைந்து கிடக்கிறது. தமிழ்நாட்டின் வரலாறும் தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு இருக்கிறது. இந்திய, ஏன் உலக வரலாறும் கூட அதனுள் காணப்படுகிறது.

தான் பிறந்த ஆண்டு 1924 என்று குறிப்பிடும் போது, அந்த ஆண்டில் இந்திய அளவிலும், உலக அளவிலும் நடந்த முதன்மையான வரலாற்றுக் குறிப்புகளையும் தலைவர் கலைஞர் சேர்த்தே சொல்வார். ஏனெனில், அவருடைய வாழ்வு என்பது வெறும் தனிமனித வாழ்வில்லை. அது இயக்க வாழ்வு, பொது வாழ்வு.

### தமிழ்நாட்டின் வரலாற்றுக் களஞ்சியம்

தன் வாழ்வின் எண்பது ஆண்டுகால வரலாற்றை, கலைஞர் அதில் பதிவு செய்துள்ளார். ஆறு தொகுதிகளாக அந்த நூல் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் 600 பக்கங்களுக்குக் குறையாமல் செய்திகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, ஐந்தாம் தொகுதி மிகப்பெரியதாக ஆயிரம் பக்கங்களைக் கொண்டுள்ளது. மொத்தம் 4,162 பக்கங்களில் நெஞ்சுக்கு நீதி எழுதப்பட்டுள்ளது. எனினும், இறுதிப் பதினைந்து ஆண்டுகள், அதில் இடம்பெற வில்லை என்பதையும் இங்கு நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு நீண்ட தன் வரலாறு, வேறு அரசியல் தலைவர்களால் எழுதப்பட்டு இருக்கின்றதா என்று தெரியவில்லை. அதுவும், ஓய்வாக வேறு பணிகள் அற்று இருந்த காலத்தில் எழுதப்பட்ட நூல் இல்லை இது. அன்றாடம் சூடான அரசியல் சிக்கல்கள், ஒவ்வொரு நாளும் பரபரப்பான சூழல் - இதற்கிடையில்தான் கலைஞர் தன் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியிருக்கிறார்.

இதனை வெறுமனே ஒரு வாழ்க்கை வரலாற்று நூல் என்று சுருக்கி விட முடியாது. தமிழ்நாட்டின் வரலாற்றுக் களஞ்சியம் என்றே கூற வேண்டும். 1924-ஆம் ஆண்டு தொடங்கி 2003-ஆம் ஆண்டு வரையில், ஏறத்தாழ 80 ஆண்டுகள், தமிழ்நாட்டிலும், தி.மு.கழகத்திலும் நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகள் அனைத்தும் இத்தொகுதிகளில் பதிவாகியுள்ளன. கலைஞர் ஆற்றிய பல உரைகள் அப்படியே தரப்பட்டுள்ளன. எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சிறையில் இருந்த நாட்களில், தமிழ்நாட்டின் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது என்று, எல்லா காலங்களிலும் நடைபெற்றவைகளைத் தவறாமல் பதிவு செய்திருக்கும் மிக அரிய நூல் என்று இதனைக் கூற வேண்டும்.

**80 ஆண்டுகள், தமிழ்நாட்டிலும், தி.மு.கழகத்திலும் நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகள் அனைத்தும் இத்தொகுதிகளில் பதிவாகியுள்ளன.**

### புள்ளிவிவரங்களால் நிறைந்த நூல்!

'இயக்கம் நடத்திய போராட்டங்கள்', 'இயக்கம் நடத்திய ஏடுகள்', 'இயக்கம் கண்ட தேர்தல்கள்' என்று தி.மு.கழகம் சந்தித்த பல தளங்களையும், களங்களையும் தலைவர் கலைஞர் பதிவு செய்திருக்கிறார்.

1937-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம், 1957-ஆம் ஆண்டில் சந்தித்த முதல் தேர்தல், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அந்தத் தருணம், அதனைத் தொடர்ந்து அண்ணாவின் மரணம் என்று படிப்படியாக எல்லா நிகழ்வுகளும் தரவுகளோடு பதிவாகியுள்ளன.

இவை அனைத்தும் முதல் தொகுதியில் உள்ளன. முதலமைச்சரானபோது, இரண்டாவது தொகுதி தொடங்குகிறது. எம்.ஜி.ஆர் கட்சியை விட்டுப் பிரிந்த போது ஏற்பட்ட நெருக்கடி, அதன் பிறகு வந்த மிகக் கொடுமையான நெருக்கடி நிலைக் காலம் என்று கழகத் தோழர்கள் விரிவாக ஒவ்வொன்றையும் அறிந்து கொள்வதற்கு இந்தத் தொகுதிகளைப் படித்தே தீர வேண்டும்.

பெரிய பெரிய செய்திகள் மட்டும்தான் என்று இல்லை. ஒரு சின்ன இடைத்தேர்தல் வருமானால், அந்த இடைத் தேர்தலில் என்னென்ன நடந்தது, யார் வெற்றி பெற்றார்கள், எந்தெந்தக் கட்சிகள் எத்தனை வாக்குகளைப் பெற்றிருந்தன என்பது வரையில் அனைத்தையும் புள்ளிவிவரங்களோடு கலைஞர் நமக்கு எடுத்துத் தந்திருக்கிறார்.




### தமிழுக்கு எதிர்ச்சொல்லா திராவிடம்?

ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு தி.மு. கழகம் எந்த உதவியும் செய்யவில்லை என்று இன்றைக்குச் சிலர் கூசாமல் சொல்கிறார்கள். எத்தனை ஆதரவுக் குரல்கள், எத்தனை ஆதரவுப் போராட்டங்கள் என்பனவற்றையெல்லாம் மிக எளிதாக நாம் அறிந்து கொள்வதற்கும், அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் இந்த நூலைத் தவிர, வேறு துணை இல்லை என்றே கூற வேண்டும்.

ஈழத்துப் பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல், வேளாண்மைக் கல்லூரிகளில் இடமில்லை என்று ஜெயலலிதா அம்மையார் ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. 1996-ஆம் ஆண்டு, கலைஞர் மீண்டும் முதலமைச்சர் ஆன பிறகுதான், அந்தப் பிள்ளைகளுக்குக் கல்விக் கூடங்களின் கதவுகள் திறந்தன.

ஆரியத்துக்கு எதிர்ச்சொல்லே திராவிடம். ஆனால், இன்று சிலர் திட்டமிட்டு, தமிழுக்கு எதிர்ச்சொல் திராவிடம் என்பது போலப் பொய்யாக புனைந்துரைக்கின்றனர். 'நெஞ்சுக்கு நீதி' நூலைப் படித்துப் பார்த்தால்தான், தமிழுக்கு திராவிடம் என்னென்ன நன்மைகளை எல்லாம் செய்திருக்கிறது என்பது புரியும்.

### கழகத்தினருக்கு இரண்டாம் அடையாளம்!

தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழ் அறிஞர்கள் நினைவைப் போற்றுவதற்கும் பல செயல்களைத் தலைவர் கலைஞர் தன் ஆட்சிக் காலத்தில் செய்திருக்கிறார்.


நம் கொள்கை சார்ந்த தமிழ் அறிஞர்களுக்கு மட்டும் என்று இல்லாமல், வேறு கருத்தியல்களைக் கொண்டிருந்தவர்களான நாமக்கல் கவிஞர், பரலி சு.நெல்லையப்பர் ஆகியோருக்கும், முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் உதவி செய்தும், பெருமைப்படுத்தியும் இருக்கிறார்.

தி.மு.கழக உறுப்பினர் என்பதற்கு அடையாளம், உறுப்பினர் சீட்டு வைத்திருப்பது மட்டுமன்று. அது முதல் அடையாளம். 'நெஞ்சுக்கு நீதி' ஆறு தொகுதிகளையும் தங்களின் வீட்டில் வைத்திருப்பது இரண்டாவது அடையாளம். அவற்றைப் படித்து முடிக்கும் போதுதான், நாம் தி.மு.க. காரர்கள் என்பதற்கான முழுமையான அடையாளம் வந்து சேரும்!

-வாசிப்போம்

## திராவிட இயக்க இதழ்கள் - 'குமரன்'

'சீர்திருத்தச் செம்மல்' என்று அழைக்கப் பட்ட சொ.முருகப்பா அவர்களால், 1922-ஆம் ஆண்டில் மே மாதம் தொடங்கப்பட்டது 'குமரன்' மாத இதழ். இது காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. சமயம் மற்றும் தமிழ் இலக்கியத்துக்கு முதன்மையான இடம் கொடுக்கப் பட்டாலும், திராவிட இயக்கச் சிந்தனைகளுக்கும் முக்கியத்துவம் அளித்த இதழ் இது. ஒரே நேரத்தில் மாதப் பதிப்பு, வாரப் பதிப்பு என இருவிதங்களில் 'குமரன்' வெளிவந்திருக்கிறது. வாரப் பதிப்பு, 1923 -ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் வெளிவந்திருக்கிறது.



அட்டைப் படங்கள் எதுவுமற்று, முகப்புப் பக்கத்திலேயே தலையங்கக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கிறது இந்த இதழ். முகப்புப் பக்கத்தின் மேல் பகுதியில் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்ற குறள் இடம்பெற்றுள்ளது.

தமிழர்களின் கடவுளான முருகனின் இன்னொரு பெயர் 'குமரன்'. எனவே, முருக பக்தரான 'தமிழ்த்தென்றல்' திரு.வி.க.விடம் முருகனைப் பற்றிய ஒரு கட்டுரை தருமாறு முருகப்பா கேட்டுக்கொள்ள, அதனை ஏற்று திரு.வி.க. எழுதியதுதான் பின்னர், 'முருகன் அல்லது அழகு' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது.

ஆனால், 1930-களில் இவ்விதழ் முற்றிலும் சுயமரியாதைச் செய்திகள், அது சார்ந்த கட்டுரைகளைக் கொண்ட இதழாகவே வெளிவந்தது. காரணம், முருகப்பா அக்கால கட்டங்களில் சுயமரியாதை இயக்கத்தினருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அதன் விளைவாகவே, பகுத்தறிவுச் சிந்தனை கொண்ட கட்டுரைகள் அதிகம் வெளியாகின. 'பெண் மக்களும் சுயமரியாதைக் கொள்கைகளும்', 'விக்கிரகங்களுக்கு அடி', 'விதவைகளாவது தலைவிதியா', 'பலிச்சவரையில் பிராமணன்', 'ஆதி திராவிடரின் துயரம்' என அப்போதே காத்திரமான படைப்புகள் இந்த இதழில் வெளிவந்திருக்கின்றன.

ஜானகி, மரகதவல்லியார், நீலாவதி என பெண்கள் பலர் சுயமரியாதை இயக்கச் சிந்தனை சார்ந்த கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

## :ப்ளாஷ்பேக்



### கடிகாரமும் படமும்!

என் தாத்தா 'மிசா' வையைநம்பி, மதுரை மாநகர் அவைத் தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் கழகப் பணியாற்றினார். 'வாய்யா மீசைக்காரா' என்று தலைவர் கலைஞர் அழைக்கும் அளவுக்கு, அவரது அன்பைப் பெற்றிருந்தார் என் தாத்தா. பொதுக்கூட்டத்தில் அதிகம் நிதிவசூல் செய்தமைக்காக, 1987-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் என் தாத்தாவை அழைத்து கைக்கடிகாரம் ஒன்றை அன்பளிப்பாக அளித்தார். அந்தக் கடிகாரமும் இந்தப் புகைப்படமும் தாத்தாவின் நினைவாக, எங்களிடம் இன்றளவும் இருக்கிறது.



வாசிம் அக்ரம்

**-சே.வாசிம் அக்ரம், துணை அமைப்பாளர், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, மதுரை மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in




## சமூக நீதி சமர்!

சமூக நீதிப் போராட்டத்தில், சட்டப் போராட்டத்தின் பங்கும் சமமானது. சட்ட வழிமுறைகளின் மூலம் சமூக நீதியை நிலை நிறுத்தியதில், தமிழ்நாட்டின் பங்கும் முக்கியமானது. அதன் தொடர்ச்சியாக தற்போது நடிகர் சூர்யா முன்னெடுத்துள்ள 'சத்திய தேவ் சட்டப் பயிற்சி மையம்' சமத்துவம், சமூகநீதிப் போராட்டத்திற்கு புதிய தலைமுறையை உருவாக்க உள்ளது.


நீதியரசர் சந்துருவை இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ள இந்த மையத்தை, திராவிட மாடல் அரசை உலகுக்கு அறிவிக்கும் நமது முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார். கலைஞர் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து உருவாகும் அறிவியக்கம், இந்தியா உலகை வெல்ல வேண்டும் என்பது முதலமைச்சரின் முதன்மையான நோக்கம். 'சத்தியதேவ் சட்டப் பயிற்சி மையம்' சரியானவர்களை அடையாளம் கண்டு களம் இறக்கட்டும். சமூக நீதி சமர் வெல்லட்டும்.

## கருவூலம்

### சென்னை பெயர் மாற்றம்!

**1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று கழகம் மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. அப்போது, சென்னை நகரம் ஆங்கிலத்தில் மெட்ராஸ் என்றும் பிற மொழிகளில் மதராஸ் என்றும் அழைக்கப்பட்டு வந்ததை "சென்னை" என பெயர் மாற்றம் செய்தார் முதலமைச்சர் கலைஞர். அனைத்து மொழிகளிலும் "சென்னை" என்றே அழைக்கவேண்டும் என்ற தமிழக அரசின் அறிவிப்பை பல தரப்பினரும் வரவேற்றனர். பேரறிஞர் அண்ணா மதராஸ் மாகாணத்தை 'தமிழ்நாடு' என மாற்றியதைப் போல, கலைஞர் மெட்ராஸ் என்பதை 'சென்னை' என மாற்றி தமிழை நிலைநாட்டினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 182




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.